# தொற்றக்கூடிய ஆபத்திலுள்ள நபர்களுக்கு 2022 இலையுதிர்கால கொவிட்-19-தடுப்பூசி குறித்த தகவல்கள்

## முக்கியமானவையின் சுருக்கம்

- விசேடமாக கொவிட்-19 தொற்றக்கூடிய ஆபத்தில் உள்ள நபர்கள் 2022 இலையுதிர்காலத்தில் கடுமையான நோய்த் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவதற்காக ஆகக் குறைந்தது தற்காலிகமாக பூஸ்டர் தடுப்பூசி மூலம் பாதுகாப்பை மேம்படுத்திக் கொள்ளலாம்.
- 2022 இலையுதிர்கால பூஸ்டர் தடுப்பூசி அனைவருக்கும் அதிலும் விசேடமாக தொற்றக்கூடிய ஆபத்தில் உள்ள நபர்களுக்கு கடுமையாகப் பரிந்துரை செய்யப்படுகின்றது:
  - 65 வயதுக்கு மேற்பட்ட நபர்கள்
  - 16 வயதுக்கு மேற்பட்ட குறிப்பிட்ட நாள்பட்ட நோயுள்ள நபர்கள்
  - Trisomie 21 நோயுள்ள 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்
  - கர்ப்பவதிகள்
- கொவிட்-19க்கு எதிரான தடுப்பூசி பாதுகாப்பானது- அதிக வயதான நபர்களுக்கும் மற்றும் குறிப்பிட்ட நாள்பட்ட நோயுள்ள நபர்களுக்கும்[1] அத்துடன் கர்ப்பவதிகளுக்கும்.
  - மேலதிக தகவல்களுக்கு *→ தகவல்பத்திரம் «கொவிட்-19-தடுப்பூசி குறித்த தகவல்கள்»*

**எந்த நபர்கள் விசேடமாகத் தொற்றக்கூடிய ஆபத்துள்ளவர்களாகக் கணிக்கப்படுகின்றனர்?**

a) 65 வயதுக்கு மேற்பட்ட நபர்கள்

b) 16 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் குறிப்பிட்ட வடிவத்தில் பின்வரும் நாள்பட்ட நோய்களுடன்[1]:
- உயர் இரத்த அழுத்தம்
- இதய-சுற்றோட்ட-நோய்கள்
- நீரழிவு
- சுவாசப்பை- மற்றும் மூச்சுவழி நோய்கள்
- புற்றுநோய்
- நோயெதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் நோய்கள் மற்றும் சிகிச்சைகள்
- அதிக உடற்பருமன் (BMI ≥ 35 kg/m$^2$)
- சிறுநீரக செயலிழப்பு
- ஈரல் அழற்சி

c) Trisomie 21 நோயுள்ள 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்

d) கர்ப்பவதிகள்

**«விசேடமாகத் தொற்றக்கூடியவர்கள்» என்பதன் அர்த்தம் என்ன?**

கொறொனாவைரஸ் இனால் தொற்றொன்று ஏற்பட்ட பின் கொவிட்-19 இனால் நோயுற்று அதன் போக்கு கடுமையாக இருப்பதற்கான அபாயம் உங்களுக்கு அதிகமாக உள்ளது. இதுவரை பெற்றுக்கொண்ட தடுப்புப் பாதுகாப்பு குறைவடையலாம். கொவிட்-19 உங்களுக்கு கடுமையான மற்றும் சிலவேளைகளில் மிகக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தலாம். உதாரணமாக சுவாசப்பை அழற்சியினால் கடுமையான மூச்சுத்திணறல். இதனால் உங்களுக்கு பிராணவாயு தேவைப்படும் ஆகவே வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும். நீங்கள் மீண்டும் குணமடைய நீண்ட காலம் செல்லலாம். நோயின்போக்கு மோசமடைந்தால், உங்களுக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்படும். சிலவேளைகளில் சில சமயங்களில் உங்களுக்குச் செயற்கைச் சுவாசம் வழங்க வேண்டியிருக்கும். கொவிட்-19 உடல் உறுப்புகளைப் பாதிப்படையச் செய்வதுடன் மோசமடையும் வேளைகளில் இதனால் இறக்கவும் நேரிடலாம். தொற்றுநோயின் கடுமையான போக்கால் நீண்ட காலத்துக்கு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படலாம் (கொவிட்-19-பின்னரான நோய்கள்)- உதாரணமாக சிரமமான வேலைகளின்போது மூச்சுத்திணறல், சோர்வு அல்லது கவனமெடுப்பதில் பிரச்சினைகள்.

**எதற்காக எனக்கு 2022 இலையுதிர்கால பூஸ்டர் தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகின்றது?**

அதிகரிக்கும் உட்புறத் தொடர்புகள் காரணமாக 2022 இலையுதிர்காலம் தொடக்கம் கொறொனா வைரஸ் மீளவும் மனிதர்களுக்கிடையில் அதிகம் தொற்றிக்கொள்ள சந்தர்ப்பமுள்ளது. இதன்படி கொவிட்-19 தொற்றிக்கொள்வது அல்லது நோய் ஏற்படும் ஆபத்து குளிர்காலத்தில் அதிகமுள்ளது. உங்களுக்கு கடுமையான நோயின்போக்கு ஏற்படும் ஆபத்துள்ளது மற்றும் முன்னர் பெற்ற தடுப்பூசியின் பாதுகாப்பு உங்களுக்கு முன்பாகவே குறைவடையும். இந்தத் தடுப்பூசி உங்களுக்கு ஆகக்குறைந்தது கடும் நோய்களிலிருந்து மற்றும் சிக்கல்கள் ஏற்படாமல் தற்காலிக மேம்படுத்தப்பட்ட தனிப்பட்ட பாதுகாப்பை வழங்குகின்றது. நீங்கள் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதனால், மேலதிகமாக நீண்டகால பின்விளைவுகளின் ஆபத்தைக் குறைத்துக்கொள்கின்றீர்கள் (கொவிட்-19-நோய்களின்-பின்னர்).

---

[1] நோய்களின் விபரமான பட்டியலை நீங்கள் இங்கே காணலாம்:
*Kategorien besonders gefährdeter Personen*

**எப்போது பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டும்?**
2022 இலையுதிர்கால பூஸ்டர் தடுப்பூசி, இறுதியாக கொவிட்-19-தடுப்பூசி பெற்று 4 மாதங்களின் பின்பு அல்லது கொரொனா வைரஸ் தொற்றி 4 மாதங்களின் பின்பு ஏற்றிக்கொள்ளலாம்.

இது விசேடமாகத் தொற்றக்கூடிய ஆபத்திலுள்ள நபர்கள், ஏற்கனவே இரண்டு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றியிருந்தாலும் பொருந்தும். இதனால் நீங்கள் கடுமையான நோய்ப்போக்கிலிருந்து உங்களது சொந்தப் பாதுகாப்பை மீளவும் அதிகரித்துக் கொள்ளலாம்.

செயல்திறனற்ற தடுப்பு மருந்துகளுடன் வழங்கப்படும் வேறு தடுப்பூசிகள் (உதாரணமாக தொற்றுக்காய்ச்சல் தடுப்பூசி) கொவிட்-19-தடுப்பூசி ஏற்றும் ஒரே வேளையில், அல்லது அதற்கு முன்பு அல்லது பின்பு பெற்றுக்கொள்ளலாம்.

<u>தயவுசெய்து நீங்கள் கவனத்தில் கொள்ளுங்கள்</u>: உங்களுக்கு உயர் காய்ச்சல் உள்ளதா? நீங்கள் நோயுற்றுள்ளீர்களா அல்லது சுகவீனமாக உணர்கின்றீர்களா? அப்படியானால் தடுப்பூசித் தவணையைப் பின்போடுங்கள்.

**எவ்விதமான தடுப்பூசி பரிந்துரை செய்யப்படுகின்றது?**
இலையுதிர்காலத் தடுப்பூசிக்கு நாங்கள் மாற்றுத்-தழுவிய (bivalenter mRNA-தடுப்பு மருந்து அல்லது Novavax இன் புரொட்டின் தடுப்பு மருந்து, இவை கிடைக்குமாக இருந்தால் பரிந்துரை செய்கின்றோம். இதன்போது முன்னைய தடுப்பூசிகளுக்கு எந்தத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது என்பது முக்கியமானதல்ல.

mRNA-தடுப்பு மருந்தைப் பொறுத்தவரை (Pfizer/BioNTech அல்லது Moderna) 2022 இலையுதிர்கால பூஸ்டர் தடுப்பூசி அதேவேளை இதுவரை பாவித்த (monovalenten) தடுப்பு மருந்துகள் மாற்றுத்-தழுவிய (bivalenter) தடுப்பு மருந்துகள் பொருத்தமானது. தற்போதைய தரவுகள், monovalenten mRNA-தடுப்பு மருந்துகள் அத்துடன் Omikron- வகைகள் கடுமையான நோய்தொற்றிலிருந்தும் வைத்தியசாலைக்கு செல்வதிலிருந்தும் பாதுகாப்பதை எடுத்துக் காட்டுகின்றன.

முக்கியம்: கர்ப்பவதிகள் மற்றும் பாலூட்டும் நபர்கள் ஒரு mRNA-தடுப்பு மருந்தை (Novavax இன் புரொட்டின் தடுப்பு மருந்து அல்ல) தடுப்பூசியில் ஏற்றிக்கொள்ளலாம்.

**நான் இதுவரை கொவிட்-19க்கு எதிராகத் தடுப்பூசி பெறவில்லை என்றால், எது பொருந்தும்?**
அனைத்து விசேடமாகத் தொற்றக்கூடிய ஆபத்துள்ள நபர்கள், 2022 இலையுதிர்காலம் வரை தடுப்பூசி ஏற்றாமல் இருந்தால், கொவிட்-19 தடுப்பூசியை இரு தடவைகள் 4 கிழமைகள் இடைவெளியில் ஏற்றிக்கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம்.[2]

**நான் மேலதிகமாக என்னை எவ்வாறு பாதுகாக்கலாம்?**
நீங்கள் விசேடமாகத் தொற்றக்கூடிய ஆபத்துள்ள நபர்களில் அடங்குவீர்களானால், கொரொனா வைரஸ் தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாக்க நீங்கள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் (உ.ம். உள்ளறைகளுக்குள் முகக்கவசம் அணிவது). இதற்காக எமது அடிப்படைக் கொள்கைகளை அறிந்து கொள்ளுங்கள் → *இணையப்பக்கம் «So schützen wir uns».*

**விசேடமாகத் தொற்றக்கூடிய ஆபத்துள்ள நபர்களைப் பராமரிக்கும் நபர்களுக்கு எது பொருந்தும்?**
தொற்றுநோய் ஏற்படும் ஆபத்தைக் குறைக்க விரும்புபவர்கள், விசேடமாக தொற்றக்கூடிய ஆபத்தில் உள்ள நபர்களைப் பராமரிப்பதைத் தொடர்ந்து செய்ய மற்றும் சுகாதார நடைமுறைகளைக் கைக்கொள்ள ஏதுவாக அனைத்துப் பராமரிப்பு நபர்கள் மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களும் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது.

மேலதிகமான பூஸ்டர் தடுப்பூசி இக்குழுவிற்கு ஒரு குறைவான மற்றும் குறுகிய காலத்துக்கு தொற்றிலிருந்து பாதுகாப்புடன் நோயின் தன்மையைக் குறைத்துக்கொள்கின்றது: இருப்பினும் வைரஸ் வேறு நபர்களுக்குப் பரப்புவதை தடுக்க முடியாது.

## மேலதிக தகவல்கள்

**கட்டணம்:** பரிந்துரை செய்யப்படும் கொவிட்-19-தடுப்பூசி உங்களுக்கு இலவசமானது.

**தடுப்பூசி ஏற்றும் வசதிகள்:** எங்கு நீங்கள் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளலாம் என்பது குறித்து இணையத்தளத்தில் அல்லது உங்கள் மாநில தகவல் பக்கத்தில் நீங்கள் தகவல் அறிந்து கொள்ளுங்கள் *(www.foph-coronavirus.ch/cantons).*

கொவிட்-19-தடுப்பூசி குறித்த மேலதிக தகவல்களை நீங்கள் FOPH இணையத்தளத்தில் காணலாம்: *www.foph-coronavirus.ch/vaccination* அல்லது உங்கள் வைத்தியரிடம் அல்லது உங்கள் மருந்தகத்தில் கேளுங்கள்.

**இணையவழி:**

- *Wie funktioniert die Covid-19-Impfung? | BAG (bag-coronavirus.ch)*
- *Häufig gestellte Fragen (FAQ) (admin.ch)*

[2] 30 வயதுக்கு உட்பட்ட நபர்களுக்கு முன்னுரிமையாக Pfizer/BioNTech வழங்கப்படும்.